| | |
|---|---|
| TNVR13000178<br>2024 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை<br>**அ.வ.எண்.48/2024** |

1. சோலைராஜ்
2. ஞானசௌந்தரி ... வாதிகள்

/எதிர்/

சித்திரைசாமி ... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 24.07.2026 அன்று வந்தபோது வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஆனந்தன் அவர்கள் ஆஜரான நிலையிலும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். கணேஷ்பாண்டி அவர்கள் ஆஜரான நிலையிலும், இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

1. இந்த வழக்கானது தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு சேர வேண்டிய 2/3 பாகத்தை நயமிடர் பிரித்து தனித்த சுவாதீனம் பெற ஏதுவாக வாதிகளுக்கு ஆதரவாக பாக பிரிவினைக்கான ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிராதின் சுருக்கம்:–

தாவா சொத்துக்கள் ஆதியில் ராமசுப்புக்கு பாத்தியம் ஆகும். ராமசுப்பு என்பவரிடமிருந்து பிரதிவாதி சித்திரைசாமி என்பவர் கடந்த 28.08.1984 ம் தேதியில் ஆவண எண் 611/1984 என்ற ஆவணப்படி பதிவு கிரையம் எழுதி பெற்றுள்ளார். தாவா சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு 2 ம் அவர் சீதனமாக அணிவித்து வந்த தங்க நகைகளை விற்று கிரையத்திற்குரிய பாதி தொகையை 2 ம் வாதியே கொடுத்துள்ளார். தாவா சொத்துக்களை கிரையம் வாங்க வேண்டும் என்று பிரதிவாதிக்கு ஆலோசனையும் அறிவுரையும் கூறியதே பிரதிவாதியின் மனைவியான 2 ம் வாதியே

ஆவார். ஆகவே தாவா சொத்துக்கள் பிரதிவாதி பெயரில் உள்ளதால் அவருக்கு மட்டும் முழு பாத்தியம் கிடையாது. 1ம் வாதியின் தந்தை பிரதிவாதி ஆவார். 2ம் வாதியின் கணவர் பிரதிவாதி ஆவார்.

தாவா சொத்துக்களை கிரையம் பெறுவதற்க 2ம் வாதி அவரது தங்க நகைகளை விற்பனை செய்து கிரையத்திற்குரிய பாதி கிரையத்தொகையை கொடுத்து பிரதிவாதி பெயரில் கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வாதிகள் சொல்வதை கேட்காமல் தான்தோன்றித்தனமாக வேறு 3ம் மனிதர் சொல்வதை கேட்டுக்கொண்டு தொடர்ந்து இருந்து வருகிறார். 1ம் வாதி திருமணத்தைக்கூட பிரதிவாதி செய்து வைக்கவில்லை. 2ம் வாதியே 1ம் வாதிக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். மேலும் பிரதிவாதி தற்போது வாதிகளுடன் சேர்ந்து வசிக்கவில்லை. பிரதிவாதி பல்வேறு நபர்களிடம் கடன்கள் பெற்றுள்ளதாக வாதிகள் அறிய வருகிறார்கள். மேற்படி கடன்களுக்கும் வாதிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் தொடர்பும் இல்லை. பிரதிவாதி பெற்றுள்ள கடன்களுக்கு அவரே பொறுப்பாவார். வாதிகளுக்கு தாவா சொத்தில் தலா 1/3 பங்கு உள்ளது. பிரதிவாதிக்கு 1/3 பங்கு பாகம் உள்ளது. வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் பிரிவினை இல்லாத 2/3 பங்கு உள்ளது. பிரதிவாதி தாவா சொத்துக்களை விற்பனை வில்லங்கம் செய்யும் நோக்கில் 3ம் மனிதரின் தூண்டுதலின் பேரில் கடந்த 30.01.2024ம் தேதி முதல் முயற்சி செய்து வருகிறார்.

தாவா சொத்துக்களை வாதிகளும் பிரதிவாதியும் பாகம் பிரிக்காது கூட்டாக பாத்தியம் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். எனவே இனியும் பிரதிவாதியுடன் வாதிகள் கூட்டு அனுபவம் செய்து வருவதை விரும்பவில்லை என்பதால் பிரதிவாதிக்கு வாதிகள் வழக்கறிஞர்மூலம் கடந்த 08.02.2024ம் தேதி 2/3 பங்கை பொறுத்து பாகம் கோரி அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி பதில் ஏதும் செய்யவில்லை. மேலும் பாகம் பிரித்து தரவும் முன்வரவில்லை. மேலும் பிரதிவாதி தாவா சொத்துக்களை விற்பனை செய்யும் நோக்கில் மீண்டும் கடந்த 09.02.2024ம் தேதி முதல் நில புரோக்கர்களை அணுகி வருகிறார். இனியும் தாவா சொத்துக்களை பாகம் பிரிக்காமல் அனுபவித்து வருவது வாதிகளுக்கு நன்மை பயக்காது என்பதால் வாதிகளுக்குரிய 2/3 பங்கு பாகத்தை பிரித்து தரக்கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

3. <u>பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

வாதிகளின் வழக்கு புரட்டானது. வாதிகளின் வழக்கானது பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை சித்திரைச்சாமி 28.08.1984 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றும் தாவா சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு 2 ம் வாதி சீதனமாக அனுபவித்து வந்த தங்க நகைகளை விற்று கிரையத்திற்குரிய பாதி தொகையை 2 ம் வாதி கொடுத்துள்ளார் என்றும் தாவா சொத்துக்களில் 2 ம் வாதிக்கு பாத்தியம் இருப்பதாகவும் 1 ம் வாதி திருமணத்தைக்கூட பிரதிவாதி செய்து வைக்கவில்லை என்றும் 1 ம் வாதியின் திருமணத்தை 2 ம் வாதி செய்து வைத்துள்ளார் என்றும் பிரதிவாதி பல்வேறு நபர்களிடம் கடன் பெற்றுள்ளதாகவும் மேற்படி கடன்களுக்கும் வாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் வாதிகளுக்கு தாவா சொத்தில் தலா 1/3 பங்கு பாகம் உள்ளது என்றும் பிரதிவாதிக்கு 1/3 பங்கு பாகம் உள்ளது என்றும் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் பிரிவினை இல்லாத 2/3 பங்கு உள்ளது என்றும் கூறி இருக்கும் விசயங்கள் உண்மையென ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும் பிரதிவாதியும் வாதிகளும் தாவா சொத்துக்களை கூட்டு அனுபவம் செய்து வருவதாக கூறி இருப்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. தாவா சொத்துக்களை பிரதிவாதி விற்பனை செய்யும் நோக்கில் நில புரோக்கர்களை அணுகவில்லை. மற்றபடி பிரதிவாதியின்மீது சொல்லப்பட்ட வேறு குறைபாடுகள் பொய்யானவை என்று மறுக்கப்படுகிறது. வாதிகளுக்குரிய 2/3 பங்கு பாகம் உள்ளது என்பதை பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார். எனவே வாதிகளின் பிராதை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. வாதிகள் பிராதில் கோரியுள்ளவாறு வாதிகளுக்கு தாவா சொத்தில் 2/3 பங்கு பாகத்திற்குரிய முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கத்தக்கதா? இல்லையா?
2. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**5.** வாதிகள் தரப்பில், 1ம் வாதி சோலைராஜ் வா.சா.1 ஆகவும், சோலையப்பன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி சித்திரைச்சாமி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>எழுவினா 1 ,2 க்கான தீர்வு:–</u>**

இந்த வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை பாரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** வாதிகள்தரப்பில், தாவா சொத்துக்கள் ஆதியில் ராமசுப்பு என்பவருக்கு பாத்தியப்பட்டு, மேற்படி ராமசுப்பு என்பவரிடமிருந்து கடந்த 28.08.1984 ம் தேதி ஆவண எண் 611/1984 ன்படி பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதாகவும், கிரையம் பெறுவதற்கு அவரது மனைவியான 2ம் வாதி அவர் அணிந்து வந்த சீதன தங்க நகைகளை விற்று கிரையத்திற்குரிய பாதி தொகையை கொடுத்துள்ளதாகவும், எனவே தாவா சொத்துக்கள் பிரதிவாதி பெயரில் உள்ளதால் அவருக்கு மட்டும் முழு பாத்தியம் கிடையாது எனவும், 1ம் வாதி பிரதிவாதி மற்றும் 2ம் வாதியின் மகன் எனவும், பிரதிவாதி வாதிகள் சொல்வதை கேளாமல் தான்தோன்றித்தனமாக வேறு 3ம் மனிதர் சொல்வதை கேட்டுக்கொண்டு தொடர்ந்து இருந்து வருவதாகவும், 1ம் வாதி திருமணத்தைக்கூட பிரதிவாதி செய்து வைக்கவில்லை எனவும், பிரதிவாதி தற்போது வாதிகளுடன் வசிக்கவில்லை எனவும், பிரதிவாதி பல்வேறு நபர்களிடம் கடன்கள் பெற்றுள்ளதாக வாதிகள் அறிய வருவதாகவும், மேற்படி கடன்களுக்கும் வாதிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது எனவும், பிரதிவாதி பெற்றுள்ள கடன்களுக்கு அவரே பொறுப்பாவார் எனவும், வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் தலா 1/3 பங்கு உள்ளது எனவும், பிரதிவாதி 3ம் மனிதரின் தூண்டுதலின்பேரில் தாவா சொத்துக்களை விற்பனை வில்லங்கம் செய்ய முயற்சி செய்து வருவதாகவும், எனவே இனியும் தாவா சொத்துக்களை பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவம் செய்ய வாதிகள் விரும்பவில்லை எனவும், எனவே தாவா சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**8.** பிரதிவாதி தரப்பில் வாதிகள் கூறுவதுபோல் தாவா சொத்துக்கள் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருந்தாலும் தாவா சொத்துக்களை கிரையம் பெறும்பொழுது 2ம் வாதியின் சீதன நகைகளையும் விற்று கிரைய தொகை கொடுக்கப்பட்டுள்ளதும், தாவா சொத்துக்கள் வாதி பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளதும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பிரிவினை இல்லாத 2/3 பங்கு பாகம் உள்ளது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிரதிவாதி விற்பனை செய்யும் நோக்கில் நிலபுரோக்கர்களை அணுகவில்லை என கூறப்பட்டுள்ளது.

**9.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள்தரப்பில் 1ம் வாதி சோலைராஜ் என்பவர் வா.சா.1 ஆகவும், சோலையப்பன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வாதிகள்தரப்பு வழக்கு குறித்து சாட்சியமளித்துள்ளார்கள். வாதிகள் தரப்பில், 28.08.1984 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்துக்களுக்கு பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண் 1163 வா.சா.ஆ.2 ஆகவும், வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், வாதிகள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் Track Consignment வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்துக்களுக்குரிய அரசு வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ.6 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**10.** வாதிகள் தரப்பில், தாவா சொத்து பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருந்தாலும், தாவா சொத்தை கிரையம் பெறும்பொழுது 2ம் வாதியின் சீதன தங்க நகைகளை விற்று கிரைய தொகை கொடுக்கப்பட்டது குறித்தும், தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவது குறித்தும் வாதிகள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியமும் அளிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் வாதிகளின் வழக்கை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்த போதிலும், எதிர்வழக்குரையிலேயே தாவா சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் உள்ளதாகவும், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 2/3 பங்கு உள்ளதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் பிரதிவாதியை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்க்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

"வாதிகளின் வழக்கினை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் கோரும் பாகத்தை கொடுக்க தயாராக உள்ளேன்"

என சாட்சியமளித்துள்ளார்.

**11.** மேற்படி பி.வா.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகளின் வழக்கை ஒப்புக்கொண்டு வாதிகள் கோரிய 2/3 பங்கு பாகத்தை கொடுக்க பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் வழக்கு சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிதரப்பு எதிர்வழக்குரையிலேயே வாதிகளும் பிரதிவாதியும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 2/3 பங்கு பாகம் உள்ளதாகவும் ஒப்புக்கொண்டு, மேலும் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையிலும் வாதிகளின் வழக்கை ஒப்புக்கொண்டு அவர்கள் கோரும் பாகத்தை கொடுக்க தயாராக உள்ளதாக சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, இவ்வழக்கில் பரிசீலனை செய்ய வேறு சங்கதிகள் இல்லை எனவும், பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் சாட்சியத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு பாகம் ஒதுக்கி அதன் அடிப்படையில் வாதிகளுக்கு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே எழுவினா 1 க்கு தீர்வு காணப்படுகிறது.

**12.** எழுவினா 1 க்கு வாதிகளுக்கு ஆதரவாக முடிவு காணப்பட்டுள்ள நிலையில், வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து அவ்வாறே எழுவினா 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**13.** முடிவாக வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்குச் சொத்துக்களை 3 சம பாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்கு 2 பாகம் ஒதுக்கி பாகத்திற்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 24ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH Date: 2026.07.24 17:39:15 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 சோலைராஜ்

வா.சா.2. சோலையப்பன்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 28.08.1984 | பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவண எண்.611/1984ன் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2. | 29.01.2024 | பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண் 1163 |
| வா.சா.ஆ.3. | 08.02.2024 | வில்லங்கச்சான்று |
| வா.சா.ஆ.4. | 08.02.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.5. | --- | Track Consignment |
| வா.சா.ஆ.6. | --- | அரசு வழிகாட்டி மதிப்பு |
| வா.சா.ஆ.7. | --- | வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டையின் நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>

பி.வா.சா.1. சித்திரைச்சாமி (பிரதிவாதி)

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH Digitally signed by SATHISH Date: 2026.07.24 17:39:23 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.48/2024
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 24.07.2026